**DEPOSITION OF WITNESSIN**
**THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **P.W.1** | **பெயர் : அருள்ராஜ்**<br>**த/பெ : செல்லத்துரை** | **OS.No. 38/2023** | **06.09.2024** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை)

<u>குறுக்கு விசாரணை</u>

1. சாத்தான்குளம் வட்ட ஆசிரியர் கூட்டுறவு சிக்கன நாணய கடன் சங்கம் TB 69 செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி சங்கத்தை அதன் செயலாளர் (அரசு ஊழியர்) நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சங்கத்தில் நான் தற்போது எந்த பதவியும் வகிக்கவில்லை அதாவது நான் தலைவரோ, இயக்குனரோ கிடையாது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் நாளது தேதிவரையில் மேற்படி சங்கத்தில் செயல்பட்டு வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான், வழக்கு தாக்கல் செய்யும்போது நான் துணைத் தலைவர்.

2. எனது முதல் விசாரணைக்கான பிரமாண பத்திரத்தை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் நாளது தேதிவரையில் மேற்படி சங்கத்தில் செயல்பட்டு வருவதாக நான் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல, வழக்கு தாக்கல் செய்யும்போது நான் துணைத் தலைவராக இருந்ததால் சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றத்தில் மாவட்ட பொருளாலராக உள்ளார் என்றால் சரிதான்.

3. 2ம் பிரதிவாதி மேற்படி மன்றத்தில் மாநில செயற்குழு உறுப்பினராக உள்ளார் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் பதவி வகித்த நாளிலிருந்து 5 ஆண்டு காலமாக சம்பளம் வராக ஆசிரியர்களுக்கு, அரசுடன் போராடி சம்பளம் பெற்றுக் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புதுக்குளம் கிராமம், அரசு பள்ளியில் வேலை பார்க்கும் மாரிசெல்விக்கு 1,2 பிரதிவாதிகள் சம்பளம் பெற்றுக் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. அதுபோல அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1,2 பிரதிவாதிகள் சம்பளம் பெற்றுக் கொடுத்துள்ள விபரம் எனக்கு

தெரியுமா என்றால் அது போல் நான் எதுவும் கேள்விப்படவில்லை. நான் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியில் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூட்டணி அ.இ.அ.தி.மு.கட்சி கூட்டணி என்றால் சரியல்ல.

5. என்னுடைய பிராதிலும், முதல் விசாரணை பிரமாண பத்திரத்திலும் தட்டிபோர்டு வைத்திருப்பதாக எந்தெந்த ஆசிரியர்கள் என்னிடம் கேட்டார்கள் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நிறைய பேர் கேட்டார்கள். நான் தட்டிபோர்டு வைத்ததாக சொல்வதற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரை பொய் புகார் என்று தள்ளுபடி செய்துவிட்டனர் என்றால் சரியல்ல, தள்ளுபடி செய்யப்படவில்லை.

6. மேற்படி புகார் விசாரணைக்கு நான் சென்றேனா என்றால் சென்றேன். மேற்படி புகார் எவ்வாறு முடித்து வைக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும், உரிமையியல் நீதிமன்றத்தை நாடபோகிறோம் என்பதால் மேற்படி புகார் முடித்து வைக்கப்பட்டது. என்னுடைய பிராதிலும், முதல் விசாரணை பிரமாண பத்திரத்திலும், தட்டிபோர்டு வைத்திருப்பதாக எந்தெந்த மாணவர்களின் பெற்றோர்கள் என்னிடம் கேட்டார்கள் என்று நான் குறிப்பிட்டு அவர்களது பெயர்களை கூறவில்லை என்றால் பல பேர் கூறினர்.

7. பிரதிவாதிகள் அனுமதி பெறாமல் விளம்பரம் போர்டு வைத்ததாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. சாத்தான் வட்டார கல்வி அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களை நான் சங்கத்தின் மூலமாக மிரட்டி வந்தேன் என்றால் சரியல்ல. 01.07.2024 ல் சாத்தான் வட்டார கல்வி அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்களை நான் சங்கத்தின் மூலமாக மிரட்டியதாக மேற்படி அலுவலகத்தில் இருந்து எனக்கு விளக்க அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் எனக்கு ஒரு கடிதம் கொடுக்கப்பட்டது, பின்பு திரும்ப வாபஸ் பெறப்பட்டுவிட்டது.

8. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம்தான் சாத்தான் வட்டார கல்வி அலுவலகத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட விளக்க அறிவிப்பு என்றால் சரியல்ல. தட்டிபோர்டை 1,2 பிரதிவாதிகள் வைத்திருந்தார்கள் என்று நான் சொல்வது பொய் என்றாலும், 1,2 பிரதிவாதிகள் எவ்வித தட்டிபோர்டும் வைக்கவில்லை என்றாலும்

சரியல்ல. என்னை அவமதிக்கும் வகையில் எவ்வித தட்டிபோர்டும் வைக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

9. அதனால் எனக்கு மனஉளைச்சல் ஏற்பட்டது என்றும், அதனால் என்னால் தூங்க முடியவில்லை என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் பொய்யான சம்பங்களை கூறி, பிரதிவாதிகள் மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்து, விளம்பரம் தேட முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 புகைப்படங்களை யார் எடுத்தது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி விளம்பரம் தொடர்பாக வட்டார கல்வி அலுவலகத்திலிருந்து யாரேனும் கேட்டார்களா என்றால் கல்வி அலுவலர்கள் எவரும் கேட்கவில்லை.

10. வா.சா.ஆ.2 புகாரை கொடுத்தது நான்தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 புகாரில் எனது சங்க பொறுப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் மிகுந்த மன உளைச்சல் ஏற்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது என்றால் நானும் சங்க உறுப்பினர் என்பதால் எனக்கும் பாதிப்பு உள்ளது. வா.சா.ஆ.2 புகாரில் தனிப்பட்ட முறையில் எனக்கு மன உளைச்சல் ஏற்பட்டதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் நானும் பொறுப்பாளர் என்பதால் என்னுடன் சேர்த்து மற்ற பொறுப்பாளர்களுக்காகவும் புகார் கொடுத்தேன்.

11. அப்படியானால் சுமார் எத்தனை பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மன உளைச்சல் என்றால் பல பேருக்கு மன உளைச்சல். நான் ஆசிரியர்களையும், அலுவலகர்களையும் மிரட்டி காரியம் சாதிக்கும் நபர் என்றால் சரியல்ல. அதுபோல பிரதிவாதிகளையும் மிரட்டி காரியம் சாதிக்க நினைக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.



Adda